விலை: 40.00
பக்கங்கள் : 16
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 111 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 26 சனிக்கிழமை (09.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

பல்கலை மாணவர்கள்

## பாராளுமன்ற வளாகத்தில் பாரிய ஆர்ப்பாட்டம்

### போராட்டத்தைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை பிரயோகம்



(கொழும்பு)
பாராளுமன்ற முன்றலில் நேற்று பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்களை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகங்களை மேற்கொண்டனர்.
15

## நாட்டை பொறுப்பேற்க தயாராக வேண்டும்

எதிர்க்கட்சியிடம் பொன்சேகா

(கொழும்பு)
நாட்டை பொறுப்பேற்க எப்போதும் எதிர்க் கட்சி தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.
நேற்று பாராளுமன்றில் உரையாற்றும்
15

அரசுக்கு எதிரான போராட்டங்கள்

## தீவிரப்படுத்தப்பட வேண்டும் - ஜே.வி.பி

(கொழும்பு)
அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் தீவிரப்படுத்தப்பட வேண்டும். போராட்டங்கள் நிறுத்தப்படக்கூடாது எனவும், பொது மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு தேசிய மக்கள் சக்தி முழுமையான ஆதரவை வழங்கும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர்
15

வவுனியாவில்

## மின்சாரம் தாக்கியதில்

இளைஞன் மரணம்

(வவுனியா)
வவுனியாவில் மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.
15

# ராஜபக்ச அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

- ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்
- கையொப்பங்கள் சேகரிப்பு ஆரம்பம்
- ஜே.வி.பியும் ஆதரவு



(கொழும்பு)
அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுவரவுள்ளதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.
அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிடத் தொடங்கியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.
தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பில் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்றத்தில் விரைவில் சமர்பிக்க அக்கட்சி திட்டமிட்டுள்ளது.
அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகாவிட்டால் அவருக்கு எதிராக பதவி நீக்கப் பிரேரணை முன்வைக்கப்படும் என எதிர்க்கட்சிகள் எச்சரித்துள்ளன.
நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காண ஒன்பது முன்மொழிவுகளை முன் வைத்து இந்த அறிவிப்பை வெளியிட்
15

மானிப்பாயில்

## இடி விழுந்ததில் வீடு சேதம்



(மானிப்பாய்)
மானிப்பாயில் இடி விழுந்ததில் வீடு ஒன்று
15

மூடிய அறைக்குள் கோட்டா - ரணில் சந்திப்பு

## நாணய நிதியத்திடம் செல்வது தொடர்பில் கேட்டறிந்ததாக தகவல்



(கொழும்பு)
அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம் பெற்றது.
15



அரசுக்கு எதிரான போராட்டத்தில்

## பொலிஸாருக்கு ரோஜாவை பரிசளித்த இளம் பெண்



(கொழும்பு)
அரசுக்கு எதிரான எதிர்ப்புப் போராட்டத்தின்போது பொலிஸாருக்கு இளம் பெண் ஒருவர் ரோஜாவை பரிசளித்துள்ளார்.
பாராளுமன்றத்திற்கு செல்லும் வீதியில் அரசாங்கத்திற்கு எதிராகவும் ஜனாதிபதிக்கு
15

## புத்தாண்டில் மின்வெட்டு இல்லை

(கொழும்பு)
எதிர்வரும் 13, 14 மற்றும் 15ஆம் திகதிகளில் மின்சார விநியோகம் தடை செய்யப்படாது என்று
15

நிதானத்துடன் தொடர்ந்து செயற்படவும்

## நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஆக்கபூர்வமான ஜனநாயக வழிமுறைகளை ஆராய்க

இலங்கை நிலைவரம் தொடர்பில் ஐரோப்பிய நாடுகள்

(கொழும்பு)-
நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஆக்கபூர்வமான ஜனநாயக வழிமுறைகளை ஆராயுமாறு இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கூட்டு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளன.
இலங்கையின் நிலைமை குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு
15

பாராளுமன்றத்திற்கு

## 10 நாட்கள் விடுமுறை

(கொழும்பு)
பாராளுமன்றத்திற்கு 10 நாட்கள் விடுமுறை விடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியைச் சமாளிக்க சுயாதீனமாக செயற்படவிடுங்கள்

## மத்திய வங்கியின் புதிய ஆளுநர்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியை சுயாதீன மாக செயற்பட அனுமதிப்பதே தற்போதைய நெருக்கடி நிலைமையை சமாளிப்பதற் கான ஒரே வழி என மத்திய வங்கியின் புதிய ஆளுநர் கலாநிதி நந்தலால் வீர சிங்க கூறியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் 17ஆவது ஆளுநராக நந்தலால் வீரசிங்க நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இதன்பின் கருத்து வெளியிடும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

"நாட்டின் பொருளாதாரத்தை திட்ட வட்டமான திசையில் வழிநடத்தும் ஆற்ற லும் பலமும் இலங்கை மத்திய வங்கிக்கு உள்ளது.

அடுத்த சில மாதங்களில் திருப்பு முனையை எட்ட முடியும். அதற்கு அரசி யல் ஸ்திரத்தன்மையும் சமூக ஸ்திரத் தன்மையும் அவசியம் என்றார். (ம-7)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 260 கிலோ கஞ்சாவுடன் 3 பேர் பொலிஸாரால் கைது

(மன்னார்)



தமிழ்நாட்டின் நாகை மாவட்டம் வேதாரண்யம் நகராட்சிக்குட்பட்ட ஆறு காட்டுத்துறை உப்பனாறு அருகிலிருந்து படகின் மூலம் இலங்கைக்கு கடத்த இருந்த சுமார் 25 லட்சம் ரூபாய் பெறுமதி யாக கேரள கஞ்சா மூட்டைகளுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கைக்கு கடல் வழியாக கேரள கஞ்சா கடத்தப்பட உள்ளதாக வேதாரண் யம் கடலோர காவல் நிலைய துணை காவல் கண்காணிப்பாளர் குமாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப் படையில்நேற்று முன் தினம் வியாழக் கிழமை இரவு குறித்த பகுதிக் குச் சென்ற வேதாரண்யம் கடலோர பாதுகாப்பு குழுவினர் குறித்த பகுதியில் நின்று கொண்டிருந்த சரக்கு வாகனத்தை சோதனை செய்தனர்.

இதன்போது குறித்த வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 09 சாக்கு மூட்டைகள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. (ம-7,285)

# ஓராண்டு நினைவஞ்சலி

## திரு.கந்தையா குகனேஸ்வரன்

பாடசாலை பணியாளர் -
(யா/வேலணை மத்திய கல்லூரி)



பிறப்பு 19.01.1969

இறப்பு 21.03.2021

திதி:09.04.2022

ஓராண்டு ஆனதுவே – அப்பா
எங்கு சென்றீர்கள்
போகும் இடமெல்லாம் – தேடி வந்து
கூட்டிச் சென்றோமே இப்போது
எங்கே? என்று தேடுகிறோம்
யார் கண் பட்டதோ!
நாம் வாழ்ந்த வாழ்க்கையில்
அவளிடம் போனவன் நல்லா
இருக்கிறான் என்கிறார்களே!
நீங்கள் விட்டுச்சென்ற கடமைகளை
முடித்துவிட்டு வரும் வரைக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

பிரிவுத் துயருடன்:–
மனைவி, பிள்ளைகள் (10968)

ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் க.பிரபாகரன் அவர்களின் அன்புத் தாயார்



## அமரர் கணேசமூர்த்தி கனகம்மா

தோற்றம் 22.04.1941

மறைவு 07.04.2022

அவர்கள் 07.04.2022 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயருடன்: பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும் ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை. (C-4141)

# மரண அறிவித்தல்

## திருமதி குலசிங்கம் சிவகாமசுந்தரி



மலர்வு 04.10.1941

உதிர்வு 08.04.2022

"கதம்பம்" புங்கடி வதிரி, கர வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குலசிங்கம் சிவகாமசுந்தரி அவர்கள் நேற்று (08.04.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான தம்பையா - தங்கமுத்து தம்பதிகளின் புதல்வியும் காலஞ் சென்ற குலசிங்கத்தின் அன்பு மனைவியும் ரேணுகா (ஆசிரியை - யா/தேவரையாளி இந்துக் கல்லூரி), கிருபாகரன் (ஆசிரியர் - புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரவிக்குமார் (நிர்வாகக் கிராம அலு வலர் - கரவெட்டி பிரதேச செயலகம்), துசித்தா ஆகியோரின் அன்பு மாமியும் ஆர்த்திகா, அபிராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மகேந்திரன், கமலராணி மற்றும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, பாலேந்திரன், இராசேந்திரன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (10.04.2022) ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
021 226 5568

(C-4143)

# முதலாம் ஆண்டு 19ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்



அன்னை மடியில் 21.01.1950

ஆண்டவன் அடியில் 23.03.2021

## வல்லிபுரம் இராசையா

திதி: நவமி
10.04.2022

ஆண்டு ஒன்று சென்றாலும் எம் இதயங்கள்
உங்களை மறக்காது – தந்தையே!
இல்லறத்தில் இணைந்து அன்போடு வாழ்ந்தவரே
நல்வாழ்வு போதுமென்றோ
நானிலத்தை விட்டுச் சென்றீரோ
ஓராண்டு நிறைவுபெற்றும் எமை அன்போடு
அரவணைத்த தந்தையே!
சீரும் சிறப்புமாக எம்மை வாழவைத்த தந்தையே
ஓம் சாந்தி!

கொல்லோலை வீதி,
[illegible] மேற்கு,
[illegible]. 077 653 4182

என்றும் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரி (ராணி)

(C-4142)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் உயிர்களுடன் விளையாட வேண்டாம்

# மருத்துவர்கள், ஊழியர்கள் யாழில் போராட்டம்

(குப்பிழான்)

**யாழ்.போதனா மருத்துவமனை, தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆதார மருத்துவமனைச் சமூகத்தினர், இணைந்து நேற்று வெள்ளிக்கிழமை தமது பணிகளைப் புறக்கணித்து மருத்துவமனை முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**


யாழ்ப்பாணம்


தெல்லிப்பழை


சாவகச்சேரி

அத்தியாவசிய மருந்துகள் மற்றும் ஊசி மருந்துகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினை அரசாங்கம் உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு வலியுறுத்தி நோயாளர்களின் நலன் கருதிக் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் மேற்படி மருத்துவமனைகளின் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து ஈடுபட்டனர்.

"நோயுற்றவர்களின் உயிர்களைக் காப்பாற்றுங்கள்", "சுகாதார வசதிகளை இல்லாதொழிக்க வேண்டாம்", "இலவச மருத்துவச் சேவை சீரழிந்து போகிறது. இதனால், நோயாளிகளின் உயிர்கள் காவு கொள்ளப்படுகிறது", "NO GAS NO FUEL NO MEDICINE GO HOME GOTA" உள்ளிட்ட தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட பல சுலோகங்களைத் தமது கைகளில் தாங்கி இவ்வாறு கவனயீர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி-5-18-30-33-104)

## பரபரப்பான நிலையிலும் கவனத்தை ஈர்த்த புகைப்படம்



(கொழும்பு)

நாடு முழுவதும் மக்கள் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வரும் நிலையில் இணையத்தில் புகைப்படம் ஒன்று பிரபல்யமடைந்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றின் போது தேரர் ஒருவரை மழையில் நனைய விடாமல் முஸ்லிம் மாணவி ஒருவர் புத்தகத்தினால் அவரை மறைத்துக் கொண்டுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டக்களத்தில் எடுக்கப்பட்ட இந்த புகைப்படம் இணையத்தில் வைரலாகிய நிலையில் பலரும் அதற்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இன, மத பேதமின்றி இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறுவதனை இந்த புகைப்படம் உணர்த்துவதாக பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

"நீங்கள் உங்கள் மதம் அல்லது இனத்தை முன் வைக்கவில்லை. இந்த நாட்டின் கௌரவமான குடிமகன் என்ற உங்கள் மதிப்பை இது காட்டுகிறது.

இதுதான் நம் நாட்டுக்கு தேவை. உங்களுக்கு வாழ்த்துக்கள்" எனப் பலரும் இணையத்தில் பதிவிட்டுள்ளனர். (நி-5)

## மன்னாரில்...



## வக்கற்ற அரசே வாய் கிழியப் பேசாதே

ராகலையில் போராட்டம்



## வவுனியாவில் பௌத்த குருமார்...



## புதிய அமைச்சரவை அடுத்த வாரம் பதவியேற்கும்

### ஆளும் தரப்பு அறிவிப்பு

(கொழும்பு)

புதிய அமைச்சரவை அடுத்த வாரம் பதவியேற்கும் என ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (நி-5)

## நெருக்கடிகளுக்கு தீர்வு முன்வைக்கப்படாமை கவலையளிக்கிறது - சபாநாயகர்

(கொழும்பு)

தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்து பாராளுமன்றத்தில் நடத்தும் விவாதத்தில் வழமை போன்றே அரசியல் பேசப்படுகின்றதே தவிர தற்போதை நெருக்கடியை வெற்றிகரமாக முகங்கொடுப்பது தொடர்பில் நேர் மறையான கருத்துக்களோ அல்லது தீர்வுகளோ முன் வைக்கப்படாமை கவலையளிப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கூடிய நிலையில் சபாநாயகர் விடுத்த அறிவிப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். (நி-5)

## விடுதலைப் புலிகளின் தலைவர் உயிரோடிருந்தால் நாட்டைக் காப்பாற்றியிருப்பார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் இன்று உயிருடன் இருந்தால் எம்மையும் சிங்கள மக்களையும் காப்பாற்றியிருப்பார் என போராட்டக் களத்தில் நின்று போராடிய பெண் ஒருவர் உணர்ச்சிகரமாக தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு அலரிமாளிகைக்கு முன்பாக இடம்பெற்ற பாரிய போராட்டத்தில் கலந்து கொண்டபோதே குறித்த பெண் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

இன்று மக்கள் பெரும் அவதிப் படுகின்றனர், வெட்கமாக உள்ளது. கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்த அனைவரும் இன்று துயரத்தில் உள்ளனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் இன்று உயிருடன் இருந்தால் சிங்கள மக்களையும் காப்பாற்றியிருப்பார், எம்மையும் காப்பாற்றியிருப்பார்.

எங்கேயும் சென்று நாம் கைநீட்டி கடன் வாங்கத் தேவையில்லை.

பிரபாகரன் உதவி செய்திருப்பார். இந்த நாட்டில் இருப்பதற்கு வெட்கமாக இருக்கின்றது. இதற்கு மேலும் இங்கு இருக்க முடியாது என அவர் தெரிவித்தார். (நி-5)

## பாராளுமன்றில் கைகலப்பு இரு எம்.பிக்கள் வெளியேற்றம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தின்போது ஆளும் கட்சி மட்டும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருவருக் கிடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இதனை அடுத்து ஐக்கிய மக்கள் சக்தியின் சமிந்த விஜேசிறி மற்றும் பொதுஜன பெரமுனவின் திஸ்ஸ குட்டியாராச்சி ஆகியோரை அவையில் இருந்து வெளி யேற்றுவதற்கு சபாநாயகர் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த இரண்டு உறுப்பினர்களையும் அவையில் இருந்து வெளியேற்றுவதற்கு வசதியாக பாராளுமன்ற அமர்வுகள் சிறிது நேரம் இடைநிறுத்தப்பட்டன. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டி கொக் அதிரடி; லக்னொவ் வெற்றி



ஐ.பி.எல். இருபது 20 தொடரின் 15 ஆவது லீக் போட்டியில், லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. மும்பையில் நேற்று முன்தினம் நடை பெற்ற இப்போட்டியில், லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணியும் டெல்லி கெபிட ல்ஸ் அணியும் பலப் பரீட்சை நடத்தின. இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணி, முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய டெல்லி கெபிடல்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 149 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பிரித்வீ ஷா 61 ஓட்டங்களையும் ரிஷப்பந்த் ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணியின் பந்து வீச்சில், ரவி பிஷ்னோய் 2 விக்கெட்டுகளையும் கிருஸ்ணப்பா கௌதம் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து 150 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணி, 19.4 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், லக்னொவ் சுப்பர் ஜியண்ட்ஸ் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, குயிண்டன் டி கொக் 80 ஓட்டங்களையும் கே.எல்.ராகுல் 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். டெல்லி கெபிடல்ஸ் அணியின் பந்து வீச்சில், குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுகளையும் லலித் யாதவ் மற்றும் சர்துல் தாகூர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 52 பந்துகளில் 2 சிக்ஸர்கள் 9 பவுண்ரிகள் அடங்கலாக 80 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட குயிண்டன்டி கொக் தெரிவு செய்யப்பட்டார். (4-6)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2554

### விந்துஜா




இந்த கருமத்த திங்கத்தான் அஞ்சு லட்ச ரூபாய் செலவு பண்ணி கல்யாணம் பண்ணிணோனா....

### கணேஷ்

ஷாப்பிங் போது



மனைவிக்கு தெரிவது



நமக்கு தெரிவது

### அதிசயா


தனக்கு வைக்கப்பட்டது நான்கு வகைச் சட்னி அல்ல நான்கு நாளான சட்னி என்பதை உணர்கிறார்




அப்பாவி கணவர்

### கார்த்திகா

ஒரு இடம் யார் பெயரில் இருக்கிறது என்பதை எப்படி கண்டுபிடிப்பது




அந்த இடத்தில் ஒரு கொட்டகை போட்டால் இந்த இட உரிமையாளர் தானா வருவார் கண்டுபிடித்து விடலாம்

### பிரியா




எவன் கூட கடன்தாரானோ அவனுக்கு நாடு Free



### கவிதா

கல்யாணமே ரிஸ்க் இதுல தாலி கட்டுறுதுக்கு எதுக்குடாஇவ்வளவு ரிஜ்க் எடுக்குறிங்க.....



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் பதவி விலகும் வரை தொடர்ந்து போராடுங்கள்

## எதிர்க்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் நெருக்கடியைத் தீர்க்க பாராளுமன்றம் தயாராக இல்லை என்பதால் அரசாங்கத்துக்கு எதிராக நடத்தும் போராட்டத்தை மக்கள் தொடர வேண்டும் என எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றிய போதே ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். (நி-5)

# நிதி அமைச்சராக மகிந்த?

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

மகிந்த தவிர்ந்த சமல், நாமல் மற்றும் பசில் ஆகியோருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்படமாட்டாது என சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. இந்நிலையில், புதிய நிதி அமைச்சராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப் படவுள்ளதாக அரசாங்கத்தின் உள்ளகத் தகவல்கள் தெரிவிப்பதாக சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (நி-5)

### ஊடகவியலாளர்களுக்கான அடையாள அட்டை

# செல்லுபடியாகும் காலம் நீடிப்பு

(கொழும்பு)

அரசாங்க தகவல் திணைக்களத்தினால் அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டைகளின் செல்லுபடியாகும் காலம் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை 2022, 2023 மற்றும் 2024 ஆம் வருடங்களுக்கான ஊடக அடையாள அட்டைகள் மிக விரைவில் வழங்கப்படுமெனவும் அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (நி-5)

# கவனத்தை ஈர்த்த பதாகை



(மட்டக்களப்பு)

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் புதிய நிதியமைச்சராக பதவியேற்கவுள்ளதாக தெரிவித்து மட்டக்களப்பில் பதாகை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பதாகை நேற்று முன்தினம் இரவு முதல் மட்டக்களப்பு - கல்லடி பாலத்திற்கு அருகில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அந்தப் பதாகையில் "புதிய நிதியமைச்சராக பதவியேற்கவுள்ள சாணக்கியன் இராசமாணிக்கத்திற்கு எமது நல்வாழ்த்துகள்" என எழுதப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த பதாகைக்கு இலங்கை தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணி உரிமை கோரியுள்ளது. (நி-5)


# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
14 • 11 • 1952

ஆண்டவன் அடியில்
19 • 03 • 2013



அமரர்.திருமதி.**அமுதரத்தினம் (அமுதா) கணேசமூர்த்தி**

திதி–09.04.2022 பூர்வபக்க அட்டமி

ஆண்டுகள் ஒன்பது ஆனாலும் ஓயுமோ உம் நினைவு
எம் ஊனோடும் உணர்வோடும் ஒன்றாய்க் கலந்த உத்தமியே!
வேரூடே நீர் சுரந்து விழுதுகளைத் தாங்கி நின்றீர்!
வேண்டுவன வெல்லாம் வேண்டாமலே விரும்பி ஈந்தீர்!
சீரான வாழ்வு தந்து சிறப்போங்கச் செய்த அம்மாவே!
சேயர் நாம் செய்வதறியாது சிந்தை கலங்கி நொந்தோம்
தீராத நினைவலைகள் தினந்தினமும் வந்தெம்மைத்
தெருட்டுவதும் தெய்வமே அறியாயோ?
நீராடுங் கண்களுடன் நிதமுமைப் போற்றி நின்றோம்
நேயமுடன் வாராயோ! நிம்மதியைத் தாராயோ!

**என்றும் உங்கள் நினைவுகளுடன்...**

(10962)

இல.14, கோவிலாக்கண்டி,
நாவற்குழி கிழக்கு, கைதடி.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# இராசிபலன்

09.04.2022
பங்குனி 26, சனிக்கிழமை
அட்டமி முன்னிரவு 3.01 மணிவரை

புனர்பூசம் பின்னிரவு 3.01 மணிவரை
சுபநேரம் 3.07-04.37 மணிவரை
இராகுகாலம் 9.07-10.37 மணிவரை

சந்திராஷ்டமம்: கேட்டை

வளவன்




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், போசன நன்மையுண்டு.




பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள்.




விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், புதிய திட்டங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.




வீட்டு உபயோகப் பொருட் களை வாங்கும் வாய்ப்பு ண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.




குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.




பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் நிலையுண்டு.




எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், திறமைகள் வெளிப்படும் நாள்.




அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




பேச்சில் கனிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், மனிதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதை அடக்கி வைப்பதுதான் மனிதனுக்கு கஷ்டமான காரியம்.



சுழிபுரம் தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேற்படி முதியோர் இல்லத்தின் பாலச்சந்திரன் அரங்கில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. (படங்கள்:- ரவிசாந்)

# உரிமை கோரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குகளுக்காக பாரப்படுத்தப்பட்டுள்ள NP BDY - 7732, NP WY - 4150, NP JN - 0688, CP TG - 9235, NP BHB - 3598 ஆகிய இலக்கங்களை கொண்ட மோட்டார் சைக்கிள்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே குறித்த மோட்டார் சைக்கிள்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் இரண்டுமாத காலப் பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமூகமளித்து பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-5)

# இரத்ததான முகாம்

(குப்பிளான்)

இணுவில் பொதுநூலக ஆண்டு விழாவை முன்னிட்டு இரத்ததான முகாம் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மேற்படி பொதுநூலக மண்டபத்தில் இடம்பெறும்.

இந்த இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-5-18)

# ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 82 ஆவது ஆண்டு விழா நாளை 10 ஆம் திகதி மற்றும் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆகிய இருதினங்களும் நடைபெறவுள்ளது.

அந்த வகையில் தொடக்க நாள் நிகழ்வுகள் நாளை மாலை 6 மணிக்கு ஸ்ரீ முருகன் சன சமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் ச.யசிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

2 ஆம் நாள் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெறும்.

2 ஆம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் கலந்து கொள்வர். இதன் போது கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (4-5)

# செயற்பட்டு மகிழ்வோம் விழா

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மேற்கு விவேகானந்தா முன்பள்ளி மழலைகளின் செயற்பட்டு மகிழ்வோம் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இந்து இளைஞர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (4-5)

# நோயாளியை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

வலிப்புடன் சுய நினைவின்றி பெயர், இடம் தெரியாத ஆண் நோயாளி ஒருவர் கடந்த 5 ஆம் திகதி நோயாளர் காவு வண்டி மூலம் யாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த நோயாளியை இதுவரை எவரும் பொறுப்பேற்கவில்லை அவரது உறவினர்கள் எவரேனும் இருப்பின் அவரை பொறுப்பேற்குமாறு போதனா மருத்துவமனை பிரதி பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா கேட்டுக் கொண்டுள்ளார். (4-5)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சமூக சேவா சங்க பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாலர் பகல் விடுதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சமாதான நீதவான் க.பரமானந்தராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி. சுபாஜினி மதியழகன், யாழ் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (4-5)

# ஆசிரியரின் ஒன்றரைப் பவுண் சங்கிலி அறுப்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மதியம் ஆசிரியை ஒருவரின் ஒன்றரைப் பவுண் சங்கிலி அறுக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் சென்ற ஆசிரியையை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்ற நபர்கள் ஆள் நடமாட்டம் அற்ற இடத்தில் வைத்து சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30)

# சட்ட விரோத மணல் அகழ்வு சாரதி தப்பியோட்டம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலாவி பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவியந்திரத்தை கொடிகாமப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

பாலாவிப் பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வு இடம் பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட பொலிஸார் மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவியந்திரத்தை கைப்பற்றினர்.

இருப்பினும் உழவியந்திரச் சாரதி தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிடிக்கப்பட்ட உழவியந்திரத்தை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருப்பதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30)

# போதை மருந்துடன் ஒருவர் கைது

(அராலி)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாரந்தனை தெற்கு பகுதியில், ஊசி மூலம் ஏற்றப்படும் போதை மருந்தை உடைமையில் வைத்திருந்த 47 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் ஊர்காவற்றுறை பொலிஸ் புலனாய்வு பிரிவினர் மற்றும் பொலிஸார் இணைந்து இக்கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை 50 ஆயிரம் ரூபாய் சரீரப் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டார். குறித்த போதை மருந்து எங்கிருந்து கிடைத்தது என்ற விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-104)



திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் காட்சி நேற்று முன்தினம் மன்ற அரங்கில் இடம்பெற்றது. நூற்றுக்கும் அதிகமான கலைஞர்கள் இதில் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:- சிவசாந்தன்)



புலம்பெயர் உறவுகளான விஜயகுமார் மகேஷ்வரி தம்பதிகள் தமது பிறந்ததினத்தை முன்னிட்டு அராலி கிழக்கு அமெரிக்கன் மிசன் பாடசாலை மாணவர்களுக்கு ஒருதொகுதி கணிதபாட நூல்கள் வழங்கியதுடன் தரம் 6-11 வரையான கணித பாடநூற்தொகுதி ஒன்றையும் பாடசாலை நூலகத்திற்காக கல்லூரி அதிபரிடம் அன்பளிப்பாக வழங்கினர்.



சங்கரி சிவகணேசனின் 'உன் நிலம் நோக்கி நகரும் மேகம்' நூல் அறிமுக விழா கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் மாதத்தின் பின் நாடு இருளில் மூழ்கும் அபாயம்

## நிலைமையின் தீவிரம் மக்களுக்கு விளங்கவில்லை

### இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் உப தலைவர்

**(கொழும்பு) நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமை குறித்து இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்கள் இன்னும் அறியவில்லை என இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் உப தலைவர் துமிந்த ஹுலங்கமுவ தெரிவித்துள்ளார்.**

தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஜூன் மாதத்தின் பின்னர் நாடு இருளில் மூழ்கும் அபாயம் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"நம் நாட்டு மக்களுக்கு நிலைமையின் தீவிரம் தெரியுமா என்று தெரியவில்லை. இந்த வாரம் சர்வதேச நாணய நிதியத்திடம் பேச்சு வார்த்தையை தொடங்கவில்லை என்றால், நிதி ஆலோசகரை நியமித்து, கடனை மறுசீரமைக்க முடியாது.

ஜூலையில் நாங்கள் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டும், எமது கையிருப்பில் இருந்து இதனை செலுத்த வேண்டும்.

இந்த ஒரு பில்லியனை செலுத்துவதற்கு எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு எவ்வித இறக்குமதிகளை மேற்கொள்ளாமல் நமது வருவாய் அனைத்தையும் சேமிக்க வேண்டும்.

அப்போது இந்த நாட்டில் மருந்து, மின்சாரம், எரிபொருள், எரிவாயு எதுவும் இருக்காது. மே மாத இறுதிக்குள் இந்தியாவில் இருந்து வந்த எரிபொருள் தீர்ந்துவிடும். அதற்குப் பிறகு எரிபொருளை பெற்றுக் கொள்வது எப்படி? நிலைமை மிகவும் தீவிரமானது.

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன் பேச்சுவார்த்தை நடத்த நிதி அமைச்சர் ஒருவர் இருக்க வேண்டும். ஒரு அரசாங்கம் இருக்க வேண்டும். நாம் விரைந்து நடவடிக்கை எடுக்காவிட்டால், ஜூன் மாதத்திற்கு பிறகு நாடு முழுவதும் இருளில் மூழ்கும். இன்று நாம் ஒரு பில்லியன் இல்லை 100 மில்லியன் கூட கொடுக்க முடியாத நிலையில் உள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-5)


# மணிவிழா வாழ்த்து

எமது பாடசாலையின் இடைநிலைப்பிரிவுப் பகுதித் தலைவராக கடமையாற்றி மணிவிழாக் காணும்

## செல்வி.முருகசுந்தரி கனகசுந்தரம்

(M.A, B.A, PGDE)



அன்பினால் எல்லோரையும்
அரவணைக்கும் அழகியே
ஆத்மார்த்தமாய் செந்தமிழை
பயிற்றுவிக்கும் ஆசானே
பல்கலைகளையும் பயிற்றுவிக்கும்
பல்துறையாளரே
பண்பே உமது மூச்சாய்
வாழும் பண்பாளரே
சொல்லாற்றலால்
எல்லோரையும் கவர்ந்தவளே
சொந்தங்களாய் எம்மோடு
என்றும் இணைந்தவளே
அறுபது அகவையினில்
மகிழ்ந்திருக்கும் இந்நாளில்
அன்புடன் பல்லாண்டு வாழ்க
என வாழ்த்துகின்றோம்

(10951)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.



# யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் வித்தியாலயம்

## தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு 2021 (2022)


மோ.தஷாங்கினி 174


வி.சானுஜன் 174


த.யாகாஷ் 173


த.ஹன்சிகா 168


இ.கௌசிகன் 167


ஜெ.ஹருசித் 167


க.பிரணீஸ் 165


த.லிஷானி 165


கு.சுபானுஜன் 161


தீ.வேனுகரன் 159


மு.குருபரன் 158


ய.யுவேரகா 157


சு.தனுஷ் 155


சி.ஆகாஷ் 155



### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

1) ரு.றெகான்
2) ஹ.ஹமாஸாபானு
3) வி.ஜஸ்வின்
4) து.சதுர்க்சான்
5) பா.அட்சயன்
6) வி.வர்சினி
7) அ.பாத்திமா ஸபா
8) சு.வினுஜா
9) ந.சாரங்கி
10) இ.யதுஷிகன்
11) ஜெ.சதுர்யன்
12) ற.பைஸ்ணவன்
13) ஜெ.சிவஸ்ரிகன்
14) ந.விஜயப்பிரவின்
15) வ.ராகவன்
16) ச.அக்ஷயா
17) சு.ரிதுர்ஷன்
18) உ.கர்சன்
19) ந.டிலோஜன்
20) ம.மாதவன்
21) ச.சந்தியா
22) பி.திஷாளி
23) த.யதுஷனா


வி.வினோஷயன் 152

எமது பாடசாலையில் இருந்து 59 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 15 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்ததுடன் 38 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

எமது மாணவச் செல்வங்களை நெறிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அதிபர், ஆசிரியர்களை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(10954)


வாழ்த்துவோர்
தரம் 5 மாணவர்களின் பெற்றோர் 2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 16

# ஆயிரம் தோல்விகளே எடிசனின் வெற்றிப் படிக்கல்



தோமஸ் அல்வா எடிசன் மின்குமிழைக் கண்டுபிடித்த பிறகு தன் நண்பர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் அந்த மின்குமிழை ஒளிர வைத்து காட்டுவதற்காக ஒரு சந்திப்பை அவரது ஆய்வகத்தின் மேல் தளத்தில் ஏற்பாடு செய்திருந்தார்.

எடிசன் தனது உதவியாளரை அழைத்து மின்குமிழை மேல் தளத்திற்குக்கொண்டு வரச் சொன்னார். அந்த உதவியாளர் மின்குமிழை கொண்டு வருகையில் அது கை தவறி கீழே விழுந்து உடைந்துவிட்டது. அங்கிருந்த எல்லோரும் அதிர்ச்சி அடைந்தார்கள். உதவியாளரும் பதற்றம் அடைந்து விட்டார். ஆனால் எடிசன் எந்தப் பதற்றமும் அடையவில்லை.

ஆயிரம் தோல்விகளைச் சந்தித்து மின்குமிழை உருவாக்கிய அவருக்கு மீண்டும் ஒரு மின்குமிழை உருவாக்குவது என்பது மிகவும் எளிது என்பதால் சிறு முயற்சி செய்து மீண்டும் ஒரு மின்குமிழை உருவாக்கினார். அதை மீண்டும் அதே உதவியாளரிடம் கொடுத்து மேலே கொண்டு வரச் செய்தார்.

மின்குமிழை கீழே போட்டு உடைத்த அவரிடமே அதை மீண்டும் கொடுக்கிறீர்களே என்று சிலர் ஆச்சரியப்பட்டு எடிசனிடம் கேட்டார்கள்.

அந்த மின்குமிழ் மீண்டும் உடைந்தாலும் என்னால் இன்னொரு மின்குமிழை உருவாக்க முடியும். ஆனால் என்னுடைய உதவியாளரின் மனதை உடைத்து விட்டால் அதை என்னால் சரிசெய்ய முடியுமா? முடியவே முடியாது! அதனால்தான் மீண்டும் அவரிடம் அதே பணியை கொடுத்தேன். அவர் அவரது பணியையும், அவரது பொறுப்பையும் என்னுடைய நம்பிக்கையையும் நன்றாக உணர்ந்து மீண்டும் வேலை செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது என்றார் எடிசன்.

அப்போதுதான் எடிசனுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்த அந்த பொறுமையின் முக்கியத்துவத்தையும் அங்கிருந்த அனைவரும் உணர்ந்தார்கள்.


எடிசன் ஆயிரம் முறை தோல்வி கண்டு ஒரு மின் குமிழினை கண்டுபிடித்தார். அந்த மின் குமிழ் தனது உதவியாளரின் கை தவறி விழுந்து உடைந்ததற்காக எடிசன் திகைக்கவில்லை. நொந்து போகவில்லை. அந்த அதிர்ச்சிகரமான நிமிடங்களில் கூட அமைதியாக நடந்து கொண்ட நேர் சிந்தனை உள்ள ஒரு அற்புதமான மனிதர் எடிசன்.



வேதநாயகம் தபேந்திரன்
4 April at 19:19

# புதிய செயற்கைக்கோளை விண்ணுக்கு அனுப்பிய சீனா





(பீஜிங்)

பூமியை கண்காணிக்கும் புதிய செயற்கைக்கோள் ஒன்றை சீனா விண்ணில் செலுத்தியது.

வடமேற்கு சீனாவில் கோபி பாலைவனத்தில் உள்ள ஏவுதளத்தில் இருந்து, 'Gaofen-3 03' என்ற செயற்கைக்கோள், றொக்கெட் மூலம் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் விண்ணில் செலுத்தப்பட்டு, சுற்றுவட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டது.

நம்பகமானதும் நிலையானதுமான உயர் தெளிவுத்திறன் கொண்ட இந்த செயற்கைக்கோள் ரேடார் படங்களை பெறவும், நிலப்பரப்பு, சுற்றுச்சூழல், வன கண்காணிப்பு மற்றும் அவசரகால பேரிடர் தடுப்பு உள்ளிட்டவற்றிக்கு பயன்படுத்தப்படும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (நி-5)

# ஐ.நா.ம

# ரஷ

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் ப

செய்யப்பட்டுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ள நிலையில், அந்நாட்டுப் படையினர் உக்ரைன் தலைநகர் கீவ் புறநகர் பகுதி மற்றும் புச்சா நகரில் அப்பாவி மக்களை கொடூரமாக கொலை செய்ததற்கு இந்தியா உட்பட


## றொட்டி தொழிற்சாலை மீது ரஷ்ய படைகள் குண்டு வீசித் தாக்குதல்

# விண்ணை முட்டும் அளவிற்கு எழுந்த கரும்புகை

(கீவ்)

உக்ரைனில் றொட்டி தொழிற்சாலை மீது ரஷ்ய படைகள் நடத்திய் குண்டு வீச்சு தாக்குதலில், சேதமடைந்த கட்டடத்தில் இருந்து விண்ணை முட்டும் அளவிற்கு கரும்புகை எழுந்தது.

கார்கிவ் பகுதியில் உள்ள றொட்டி தொழிற்சாலை மீது ரஷ்ய படை குண்டு வீசித் தாக்குதல் நடத்தியது.



இந்த தாக்குதலில் ஒருவர் உயிரிழந்த நிலையில், 14 பேர் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## ரஷ்யாவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து

# தண்ணீருக்குள் இறங்கி பெண்கள் போராட்டம்

(கீவ்)

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து 43 நாட்களாகி விட்டன.

இந்நிலையில் உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் லிதுவேனியாவில் உள்ள வில்னியஸ் நகரில் உள்ள ரஷ்ய தூதரகத்தின் முன்பு சிவப்பு நிறத்தில் உள்ள குளத்தில் இறங்கி பெண்கள் நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்மையில் ரஷ்யப் படைகளிடம் இருந்து மீட்கப்பட்ட



கீவ் பகுதியில் 410 பொது மக்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டதாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் இரத்தத்தை குறிக்கும் வகையில் சிவப்பு நிறத்தில் உள்ள குளத்தில் சில பெண்கள் இறங்கி போரட்டம் நடத்தினர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் சபையில் இருந்து
# யா இடைநீக்கம்!

## உக்ரைன் வரவேற்பு

ள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து ரஷ்யா இடைநீக்கம்
து:

பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இருந்து ரஷ்யாவை இடைநீக்கம் செய்யும் தீர்மானத்தை ஐ.நா.பொதுச் சபையில் அமெரிக்கா கொண்டு வந்தது.

இந்த தீர்மானத்தின் மீது நேற்று முன்தினம் வாக்கெடுப்பு நடைபெற்றது. தீர்மானத்திற்கு ஆதரவாக 93 நாடுகள் வாக்களித்தன. 24 நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. இந்தியா உட்பட 58 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்தன.

இதையடுத்து ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இருந்து ரஷ்யாவை இடை நீக்கம் செய்யும் தீர்மானம் நிறைவேறியது. இது சட்ட விரோதம் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

வாக்கெடுப்புக்குப் பிறகு பேசிய ஐ.நாவுக்கான ரஷ்யாவின் துணைத் தூதர் ஜெனடி குஸ்மின், இது சட்ட விரோதமான மற்றும் அரசியல் உள்நோக்கம் கொண்ட நடவடிக்கை என்று தெரிவித்தார். ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இருந்து ரஷ்யா முழுவதுமாக வெளியேற முடிவு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா.மனித உரிமை சபையில் இருந்து ரஷ்யா இடைநீக்கம் செய்யும் முடிவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. மனித உரிமைகளைப் பாதுகாக்கும் ஐ.நா.அமைப்புகளில் போர்க் குற்றவாளிகளுக்கு இடமில்லை என உக்ரைன் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபா தமது டுவிட்டர் பதிவில் தெரிவித்தார். (நி-5)

# கீவை எளிதில் கைப்பற்றலாம் என தவறாக நினைத்து விட்டார் புடின்

## பென்டகன் தலைவர்

(வோஷிங்டன்)

ரஷ்ய படைகளை உக்ரைன் இராணுவம் கடுமையாக தாக்கியதையடுத்து, கீவ் நகரை கைப்பற்றுவதை கைவிட்டுவிட்டார் விளாடிமிர் புடின் என பென்டகன் தலைவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் நாட்டை மிக விரைவாக கைப்பற்றி, கீவ் தலைநகரை மிக வேகமாக கைப்பற்றி விடலாம் என்று ரஷ்ய ஜனாதிபதி நினைத்துவிட்டார். அது அவர் செய்த தவறு என்று அமெரிக்கப் பாதுகாப்பு செயலர் லாயிட் ஆஸ்டின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து லாயிட் ஆஸ்டின் மேலும் கூறியதாவது,

உக்ரைன் நாட்டை மிக விரைவாக கைப்பற்ற முடியும் என்று அவர் நினைத்தார். அது அவர் செய்த தவறு. தலைநகரைக் கைப்பற்றுவதற்கான தனது முயற்சிகளை கைவிட்டு இப்போது நாட்டின் தெற்கு மற்றும் கிழக்கில் கவனம் செலுத்துகிறார்.

ரஷ்ய படைகளை உக்ரைன் இராணுவம் கடுமையாக தாக்கியதையடுத்து, கீவ் நகரை கைப்பற்றுவதை கைவிட்டுவிட்டார் புடின் என அவர் தெரிவித்தார். (நி-5)

# புச்சா நகரை விட போரோட்யங்கா பகுதியில் மோசமான கொலைகள்

## உக்ரைன் குற்றச்சாட்டு



(கீவ்)

உக்ரைனில் ரஷ்யப் படையினரால் புச்சா நகரில் பொதுமக்கள் மோசமாக கொல்லப்பட்டிருப்பதை விட போரோட்யங்கா பகுதியில் அதைவிட மோசமான கொலைகள் நடந்திருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி வொலாடிமிர் ஜெலன்ஸ்கி குற்றம்சாட்டியுள்ளார்.

முகநூல் மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

'புச்சாவை காட்டிலும் அங்கு நிலைமை மோசமாகவுள்ளது. ரஷ்ய ஆக்கிரமிப்பாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்'.

புச்சா மற்றும் போரோட்யங்கா ஆகிய இரண்டுமே உக்ரைன் தலைநகர் கீவ்வின் புறநகர் பகுதிகள். கீவ்வை கைப்பற்ற அங்கு கடுமையான சண்டைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# வெள்ளக்காடாக காட்சியளிக்கும் சிட்னி



(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் தொடர் வெள்ளத்தால் ஏராளமான மக்கள் ஒரே மாதத்தில் இரண்டாவது முறையாக வீட்டை விட்டு வெளியேறும் சூழல் ஏற்பட்டது.

சிட்னி நகரில் கடந்த 6 வாரங்களாக கனமழை விட்டு விட்டு பெய்து வருகிறது. ஒரு மாதம் முழுதும் பெய்ய வேண்டிய மழை கடந்த புதன்கிழமை ஒரே நாள் இரவில் கொட்டித்தீர்த்தது. நகரின் ஏராளமான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியதால், 4,000 இற்கும் மேற்பட்டோர் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (நி-5)

# பிரதமருக்கு எதிரான அவநம்பிக்கை பிரேரணை நிராகரிப்பு

## அரசியலமைப்புக்கு முரண் என பாக்.உயர் நீதிமன்றம் அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிரான அவநம்பிக்கை பிரேரணை நிராகரிக்கப்பட்டமை அந்நாட்டு அரசியலமைப்புக்கு எதிரானது என பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறும் உத்தரவிட்டுள்ளது.

பிரதமர் இம்ரான் கானுக்கு எதிரான அவநம்பிக்கை பிரேரணை நிராகரிக்கப்பட்டமை தொடர்பான வாக்கெடுப்பு இன்றையதினம் இடம்பெறவுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிசையில் நின்று ஏமாற்றம்
# எரிவாயு சிலிண்டர்களை வீதியில் வைத்து வவுனியாவில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(குருமன்காடு)

**வவுனியா, பூனாவ பகுதியில் அமைந்துள்ள எரிவாயு விநியோகஸ்தர் வளாகத்தில் சமையல் எரிவாயு வழங்குவதில் குழப்ப நிலையையடுத்து மக்கள் ஏ-9 வீதியினை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



குறித்த எரிவாயு விநியோகஸ்தர் வளாகத்திலிருந்து எரிவாயு சிலிண்டர்கள் மாவட்டம் முழுவதும் விநியோகிப்படுவதுடன் தற்போது எரிவாயு தட்டுப்பாட்டையடுத்து குறித்த எரிவாயு விநியோகஸ்தர் வளாகத்திலும் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படுகின்றன.

இந்நிலையில் குறித்த விநியோக இடத்தில் நேற்றுக்காலை வரிசையில் மக்கள் காத்திருந்த போதிலும் 9.30 மணியளவில் எரிவாயு நிறைவடைந்துள்ளமையினால் இன்று விநியோகிக்கப்படமாட்டாது என நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் ஏ-9 வீதியில் எரிவாயு சிலிண்டர்களை வைத்து போராட்டத்தில் ஈடுபட்டமையினால் ஏ-9 வீதியூடான போக்குவரத்து முழுமையாக பாதிப்படைந்ததுடன் குறித்த இடத்திற்கு ஈரப்பெரியகுளம் பொலிஸார் வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடி மக்களை வெளியேற்றினர். (4-5-250)

# மேலும் ஒரு குடும்பம் இந்தியாவிற்கு தப்பி ஓடியது

(மன்னார்)

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக அங்கு வசிக்கும் மக்கள் உணவு, அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்திற்கு வருகின்ற நிலையில் மேலும் மன்னாரில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை தனுஷ்கோடியைச் சென்றடைந்தனர்.

அண்மையில் மன்னார் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த 3 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் கடல் வழியாக தனுஷ்கோடி சென்றடைந்தனர்.

தமிழகத்திற்கு அகதிகளாக சென்ற அவர்களை மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைத்துள்ளனர்.

இந்நிலையில் மன்னார் முத்தரிப்புத்துறையை சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளனர். (4-5-100-285)

# பால் உற்பத்தித்துறை பாதிக்கப்படும் அபாயம்
## அரச கால்நடை மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(நெளுக்குளம்)

பெரும்பாலான பண்ணையாளர்கள் பாலுற்பத்தி துறையை விட்டு விலகிச் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக இலங்கை அரச கால்நடை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச்செயலாளர் மருத்துவர் எஸ்.சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியால் ஏற்பட்டுள்ள உணவுத்தட்டுப்பாடு தொடர்பாக அவரால் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாலுற்பத்தியை அதிகரிக்க அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படும் திட்டங்களுக்காக வரவு-செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி கிடைக்கப்பெறாமையால் எதிர்வரும் ஆண்டுகளில் எதிர்பார்க்கப்பட்ட பாலுற்பத்தியை பெற முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

மேலும் அதிகரிக்கப்பட்ட தீவன மற்றும் கால்நடை மருந்துகளின் விலையினால் பாலுற்பத்திக்கான செலவீனம் மேலும் 50% ஆல் அதிகரித்துள்ளமையினால் பண்ணையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் பெரும்பாலான பண்ணையாளர்கள் பாலுற்பத்தித்துறையை விலகிச் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சுமார் 42% ஆக காணப்படும் உள்ளூர் பாலுற்பத்தியானது எதிர்காலத்தில் 30% ஆகக் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேலும் அந்நியசெலாவணி நெருக்கடியினால் உணவு உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்யக்கூட முடியாத இத்தருணத்தில் உள்நாட்டு உற்பத்திச் சரிவு என்பது நாட்டின் உணவுத் தட்டுப்பாட்டை அதிகப்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-299)

# சந்தை கட்டட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபையின் மண்டைதீவு உப அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள வாராந்த சந்தை கட்டடத்தின் திறப்பு விழாவும் விற்பனை நிகழ்வும் இன்று காலை 9 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-5)

## சௌபாக்கிய நிலையத்தில் திருட்டு
# பொலிஸில் முறைப்பாடு

(நெளுக்குளம்)

வவுனியா நொச்சிமோட்டை கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள சாந்தசோலையில் அமைக்கப்பட்டு வரும் சௌபாக்கிய பால் உற்பத்தி நிலையத்தியத்தை உடைத்த திருடர்கள் அங்கிருந்த சீமெந்து பைகள், மின் விசிறிகள், அலுமினிய இரும்பு பார்கள் என்பனவற்றை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா சாந்தசோலை பிரதான கண்டி வீதியில் அமைக்கப்பட்டு வரும் சௌபாக்கிய பால் உற்பத்தி நிலையம் இன்னும் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படவில்லை. இந்நிலையில் அதன் நிர்மாணப்பணிகள் தற்சமயம் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் அண்மையில் ஊரடங்கு தினத்தன்று குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் நிலைய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். (4-5-299)

# வடகடல் நிறுவன ஊழியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்



(அராலி)

குருநகர் வடகடல் நிறுவன ஊழியர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

தேவையற்ற செலவுகளால் ஊழியர்களின் ஊதியம் சுரண்டப்படுகிறது, கடந்த மூன்று ஆண்டுகளாக பொது முகாமையாளர் நியமிக்கப்படவில்லை, வலைகளுக்கான நூல் கொள்வனவின்போது கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப் படுவதில்லை, நிறுவன ஊழியர்களின் நலனை எமக்கு தாருங்கள் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (4-5-104)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 260 | 250 | 240 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 185 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 | 400 |
| தக்காளி | 100 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 150 | 120 | 100 |
| கோவா | 100 | 100 | 100 | 120 |
| கரட் | 140 | 180 | 200 | 240 |
| பூசணி | 60 | 70 | 60 | 100 |
| புடோல் | 160 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 240 | 240 | 250 | 280 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 200 | 240 |
| பாகற்காய் | 350 | 380 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 200 | 140 | 120 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 120 | 160 |
| பயற்றங்காய் | 400 | 360 | 200 | 200 |
| லீக்ஸ் | 150 | 140 | 150 | 200 |
| பீற்றூட் | 160 | 140 | 130 | 200 |
| கறிமிளகாய் | 200 | 150 | 180 | 280 |
| முருங்கைக்காய் | 1100 | 1000 | 800 | 1200 |
| போஞ்சி | 250 | 320 | 240 | 250 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 200 | 180 | 250 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 70-90 |
| இராசவள்ளி | 200 | 140 | 180 | 200 |
| வெங்காயப்பூ | -- | 200 | -- | 320 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## பதினோராமிடத்தில் குரு பகவான்; பார்க்கும் தொழிலில் இலாபம் வரும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**அற்புதமான ஆலோசனைகளை அள்ளி வழங்கும் ரிஷப இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 13.4.2022 முதல் 11 ஆம் இடமான லாப ஸ்தானத்திற்கு வருகிறார். இது வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் இடமாகும். தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

இது குருவிற்கு சொந்த வீடு என்பதால் உங்கள் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. தன்னம்பிக்கையோடும், தைரியத்தோடும் செயற்பட்டு காரியங்களை முடிப்பீர்கள்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

குரு பகவான், லாப ஸ்தானத்தில் தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் பொழுது வளர்ச்சி மீது வளர்ச்சி ஏற்படும். தனவரவு பெருகும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

சம்பாதிப்பதைப் பற்றி சிந்திக்காதவர்களுக்கு கூட வருமானம் வருவதற்கான வாய்ப்பு உருவாகும். இதுவரை 10 இல் சஞ்சரித்து பதவி மாற்றங்களை கொடுத்த குரு, இப்பொழுது சொந்தத் தொழில் செய்து சொகுசான வாழ்க்கை வாழ வழிவகுக்கப் போகிறார். அசையாச் சொத்துக்கள் வாங்குவதிலும் யோகம் உண்டாகும்.

**குருவின் பார்வை பலன்**

இந்த குருப்பெயர்ச்சியில் உங்கள் இராசிக்கு 3, 5, 7 ஆகிய இடங்களை, குரு பார்க்கப் போகிறார். 3 ஆம் இடம் தைரிய ஸ்தானம் என்பதால், அதை குரு பார்க்கும்போது, துணிந்து சில முடிவுகளை எடுப்பீர்கள். முயற்சியில் இருக்கும் முட்டுக் கடைகள் அகலும்.

பேசிப் பேசி விட்டுப் போன பஞ்சாயத்துக்கள் இப்பொழுது நல்ல முடிவிற்கு வரும். உடன் பிறப்புகள் உங்களுக்கு அனுசரணையாக இருப்பர்.

குருவின் பார்வை 5 ஆம் இடத்தில் பதிவதால் பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுப் பெறுகிறது. எனவே பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைத்து அதை விரிவுசெய்துபார்க்கும்முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

7 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால், களஸ்திர ஸ்தானம் புனிதமடைகிறது. எனவே இல்வாழ்க்கை இனிமை தருவதாக அமையப்போகிறது. திருமணத் தடை அகலும் நேரம் இது. கணவன்- மனைவிக்குள் பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்படும்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள் சுய சாரத்தில் குரு சஞ்சாரம் (13.4.2022 முதல் 30.4.2022 வரை)**

உங்கள் இராசிக்கு அஷ்டம, லாபாதிபதியானவர் குரு. அவர் பூரட்டாதி நட்சத்திரக் காலில், தன் சுய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது இலாபத்தை வாரி வழங்குவார். அதேநேரம் அஷ்டமாதிபதி என்பதால் விரயத்தையும் வழங்குவார். தொட்டது துலங்கும். தொழில் வளம் சிறக்கும். உற்றார், உறவினர் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர்.




**சனி சாரத்தில் குரு சஞ்சாரம் (1.5.2022 முதல் 24.2.2023 வரை)**

உங்கள் இராசிக்கு 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், சனி பகவான். உத்திரட்டாதி நட்சத்திரக் காலில் சனியின் சாரத்தில் குரு சஞ்சரிக்கும்போது, அற்புதமான பலன்களை அள்ளி வழங்குவார்.

இக்காலத்தை ஒரு பொற்காலமாகக் கருதலாம். தொட்டது துலங்கும். தொல்லைகள் அகலும். பணவரவு திருப்தி தரும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வரலாம். பொதுவாழ்வில் புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும்.

**புதன் சாரத்தில் குரு சஞ்சாரம் (25.2.2023 முதல் 22.4.2023 வரை)**

உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவரது சாரத்தில் ரேவதி நட்சத்திரக் காலில் குரு சஞ்சரிக்கும்போது, பொருளாதார வளர்ச்சி திருப்தி தரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவம் நடைபெறும். சுபகாரியப் பேச்சுக்கள் திடீரென வந்து மகிழ்விக்கும். பாதியில் நின்ற கட்டடப் பணி மீதியும் தொடரும்.

**குருவின் வக்கிர இயக்கம் (20.7.2022 முதல் 16.11.2022 வரை)**

இக்காலத்தில் குரு பகவான் சனியின் சாரத்தில் சஞ்சரித்து வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக சனி விளங்குவதால் இக்காலத்தில் மிகமிக கவனத்தோடு செயற்படுவது நல்லது.

தொழில் போட்டி உருவாகும். புனிதப் பயணங்களில் தடை ஏற்படும். அதேநேரத்தில் அஷ்டமாதிபதியாக குரு விளங்குவது ஒருவழிக்கு நன்மைதான்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். பகையான உறவுகள் நட்பாகும். கணவன் - மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும்.

உடல்நலம் சீராகும். மணமாலைக்காக காத்திருக்கும் உங்களின் பிள்ளைகளுக்கு மாலையும், நல்ல வேலையும் கிடைக்கும்.

**வளம் தரும் வழிபாடு**

இந்தக் குருப்பெயர்ச்சியால் இனிய பலன்கள் கிடைக்க இல்லத்து பூஜையறையில் குரு பகவான் படம் வைத்து குரு கவசம் பாடி வழிபடுங்கள். சிறப்பு வழிபாடாக யோகபலம் பெற்ற நாளில் அபிராமி அம்மன், அமிர்தகடேஸ்வரர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

ஒரு யோகி பல ஊர்களுக்குப் போகும் வழியில் முத்துூரில் ஒரு மரத்தடியே தங்கினார். அவர் மக்களுக்கு தினமும் உபதேசம் செய்து வந்தார். அவருக்கு அக்கிராமத்தவர் முறை போட்டுக் கொண்டு தினமும் உணவளித்து வந்தார்கள்.

ஒருநாள் அவர் ராமையன் என்பவனின் வீட்டில் உணவு அருந்திக் கொண்டிருந்தார். அப்போது குருசாமி என்பவன் வந்து "ராமையா நாளைக்குள் உங்கள் கடனை நான் தீர்க்க வேண்டும். ஆனால் பணம் கிடைக்கவில்லை. இன்னும் ஒரு மாதத்தில் தீர்த்து விடுகிறேன்" என்றான். ராமையனோ கோபத்தோடு "நீ சொன்ன சொல் காக்கவில்லை. உனக்குக் கடன் கொடுத்ததே தப்பு" எனக் கூறிப் பலவாறு திட்டி அனுப்பினான். அதைக் கண்ட யோகி ராமையனிடம் "அப்பனே! கோபம் கெடுதலை விளைவிப்பது. அதை அடக்க வேண்டும். நீ இப்போது அவனைத் திட்டியதால் உன் பணம் கிடைத்தா விட்டது?" என்றார்.

ராமையனும் சாதுவைப் பணிவுடன் வணங்கி "ஐயா! நான் திட்டினால் யாரும் வருந்த மாட்டார்கள். என் கோபம் திட்டிய மறுகணமே மறைந்து விடும். அதனால் இப்படித் திட்டி உடனே மறந்தும் விடுகிறேன்" என்றான்.

அப்போது யோகி ராமையனைப் பாராட்டி "கோபம் நொடியில் மறைவது என்றால் அது பாராட்டப்பட வேண்டியதே" எனக் கூறிக் கொண்டிருக்கும் போது ராமையனின் நண்பன் சீனப்பன் வந்தான். அவன் யோகியைப் பார்த்தவாறே "ஒரு வேலையும் செய்யாமல் பிறர் தயவில் வாழும் சோம்பேறிகளைப் பார்க்கவே எனக்குப் பிடிக்காது. நீ இப்படிப்பட்டவர்களுக்கு உணவளிப்பதும் சரியல்ல என்றான். இது கேட்டு ராமையன் மனம் புழுங்கியவனாய் யோகியைத் தேற்ற" ஒவ்வொருவனும் ஏதாவது ஒன்றைச் சொல்லிக் கொண்டுதான் இருப்பான்.



என்ன வித்தியாசம்?

இதற்காக அவனைக் குறை கூற முடியாது" என்றான்.


இதற்குச் சில நாட்களுக்குப் பின் யோகியைக் காண அவர் அமர்ந்திருக்கும் இடத்திற்குச் சென்றான். அப்போது அங்கு வேலு சாமியைக் கண்டான். அவனைக்கண்டதும் ராமையன் அவன் கையைப் பற்றிக் கொண்டு "ஆ! அகப்பட்டுக் கொண்டாயா? இன்று நீயா நானா என்று இரண்டில் ஒன்று முடிவாக வேண்டும்" என்றான். யோகி இடைமறித்து "கொஞ்சம் பொறு. என்ன நடந்தது என்று விபரமாகச் சொல்" என்றார்.

ராமையாவும் "போன மாதம் நான் பக்தி சிரத்தையுடன் கோவிலில் பூஜை செய்து கொண்டிருந்தேன். அப்போது அங்கே இருந்த வேலு சாமியோ அக்கிரமங்களை அதிகமாகச் செய்பவன் எல்லாம் கடவுள் பக்தனாகி விடுகிறான் என்று கூறி விட்டு ஓடிப் போய் விட்டான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




வசிட்டர் இராமன் ஆட்சியை ஏற்றுத்தான் ஆக வேண்டும் என்று வற்புறுத்தினார்; "சூரிய குலத்து மன்னர்கள் முறை பிறழ்ந்தது இல்லை.

மேலும் நான் தந்தையைப் போல மதிக்கத்தக்கவன், ஆசான், ஆசான் சொல்லைத் தட்டாதே! யான் இடும் ஆணையை ஏற்று உனக்கு உரிய நாட்டைப் பாதுகாப்பாய்" என்று கூறித் தன்னைத் தாழ்த்திக் கொண்டார்.

அம் 'முனிவனைத் தொழுது' "அறிஞ! ஒரு செயலைச் செய்வதாக ஒப்புக் கொண்டபின் அதனைக் கைவிடுவது அறமாகுமா, தாயும் தந்தையும் இட்ட கட்டளைகளை மேற்கொள்ளாத அற்பனாக நான் வாழேன்; அவர்கள் இட்ட பணியைத் தாங்கிச் செயலாற்றும் போது வேறுவிதமாக மாற்ற முனைவது நீதியாய்ப் படவில்லை; முறை தவறி நான் ஆட்சியைக் கைவிடுகிறேன் என்று சொல்கிறீர்; நீங்கள் முறை தவறி உரை செய்வதுதான் வியப்பாக உள்ளது" என்றான் இராமன்.

முனிவன் உரைத்தும் அவன் ஏற்கவில்லை என்பதை அறிந்த பரதன், முடிவாகத் தன் கருத்தைக் கூறினான்.

"அப்படியானால் நாட்டை ஆள்பவர் ஆளட்டும்; நான் காட்டை மேவுதல் உறுதி" என்றான்.

"அதுவென் உரிமை; இதை யாரும் தடுக்க முடியாது" என்ற பரதன் உறுதியாக நின்றான். வானவரும் "என்ன ஆகுமோ?" என்று அஞ்சினர்.

"தெய்வத் திருவுளமும், அங்கு கூடியிருந்தவர் கருத்தும் பரதன் ஆட்சியை ஏற்று நடத்துவதே தக்கது" என்ற முடிவுக்கு வந்தனர். மறுபடியும் இராமன் பரதனை அன்புடன் கேட்டுக் கொண்டான்.

"என் ஆணையால் பாரினை ஆள்க" என்றான்.

"குறிப்பிட்ட ஆண்டுகள் பதினான்கு முடிந்ததும் நீ அங்கு வந்து சேர வேண்டும்; ஒரு நாள் தாமதம் ஆனாலும் நெருப்பில் விழுந்து உயிர் துறப்பேன்" என்றான் பரதன்.

இராமன் உறுதி மொழி தந்தான். அதற்கு மேல் பேச முடியாமல் "நின் திருவடி நிலைகளை ஈக" என்று கேட்டான். இராமன் தன் பாதுகைகள் இரண்டனையும் அவனுக்குத் தந்தான்.

பரதன் அழுத வண்ணம் பாதுகை இரண்டையும் தரையில் வைத்து வணங்கினான்; மணி முடிகளாய் அவற்றைத் தலையில் தாங்கிக் கொண்டான்.

பரதன் அயோத்திக்கு, அடியெடுத்து வைக்கவில்லை; கங்கையைக் கடந்து, கோசல நாட்டின் தென் எல்லையில் இருந்த நந்தியம்பதியை அடைந்தான்; சிம்மாசனத்தில் இராமன் திருவடி நிலைகள் இடம் பெற்றன. அவற்றை வணங்கி வழிபட்டு இராமன் ஆட்சியைப் பரதன் அங்கு இருந்து நடத்தினான்.

சித்திர கூடத்தில் மேலும் தொடர்ந்து தங்கி இருந்தால், அயோத்தி மாந்தர், வந்து வருத்துவர் என்பதால் தானும் தம்பியும் தையலுமாகத் தென்திசை நோக்கிச் சென்றான் இராமன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகவே.. படைகள் எழுகவே
விடியவே.. இரவு விடியவே
ஆட்டம் போட்ட சவட்டம் இங்கு
ஆட்டங் காணப் போகுது. -கவிப்பேரரசு வைரமுத்து

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அண்டை நாட்டில் நடப்பது போன்ற பிரமை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவி விலகுமாறு கோரி தென்னிலங்கையில் நடக்கின்ற ஆர்ப்பாட்டங்களைப் பார்க்கும் போது இதயம் நெகிழ்ந்து போகிறது.

ஆம், தென்பகுதி மற்றும் மலையகம் உள்ளிட்ட இடங்களில் தன்னெழுச்சியாக மக்கள் நடத்துகின்ற போராட்டமும் அதில் அவர்கள் எழுப்புகின்ற கோசங்களும் அந்த மக்கள் அனுபவிக்கின்ற அவலத்தை நிதர்சனப் படுத்தி நிற்கின்றன.

ஆட்சியில் அமர்த்திய அதே மக்கள், உங்கள் ஆட்சி வேண்டாமெனக் கூறும்போது கௌரவமாக விலகிப் போவதுதான் ஆட்சியில் இருப்பவர்களுக்கு அழகு.

ஆனால் எவ்வளவுதான் மக்கள் வீதியில் இறங்கி அழுது புரண்டாலும் ஜனாதிபதிப் பதவியை விடமாட்டேன். பிரதமர் பதவியில் இருந்து போகமாட்டேன் என அடம் பிடிப்பது ஜனநாயகத்தை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தும் செயலாகும்.

தவிர, மக்களின் கோரிக்கையை ஏற்று பதவியைத் துறக்காதவர்கள் பதவி மோகம் கொண்டவர்கள் என்பதுடன் அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்ற பொதுமக்கள் மீது கடும் தாக்குதல்களை நடத்தக்கூடியவர்கள் என்பதும் இங்கு நோக்குதற்குரியது.

உண்மை பஞ்சம், பசி, பட்டினியால் வாடுகின்ற அந்த மக்களின் அவலத்தைப் போக்குவதற்கான ஒரே வழி தற்போதைய ஆட்சித் தரப்பு பதவி விலகுவதென்றால், அதனைச் செய்தாகுவது மிகவும் கட்டாயமானது.

எனினும் அவ்வாறான பெருந்தன்மை தற்போதைய ஆட்சியாளர்களிடம் மருந்துக்கும் இல்லை என்று கூறுமளவுக்கு நிலைமை உள்ளது.

இவை ஒருபுறமிருக்க, நாட்டின் பொருளாதார நெருக்கடியால், தமிழ் மக்களும் மிகுந்த கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அன்றாடம் உழைத்துச் சீவனோபாயம் நடத்துகின்ற குடும்பங்களின் நிலைமையை ஒரு கணம் நினைத்துப் பார்த்தால் இதயம் கருகும். அந்தளவுக்கு நிலைமை இருக்கிறது.

எனினும் தென்பகுதியில் நடக்கின்ற ஆர்ப்பாட்டங்களின் எதிர்வினையாக தமிழர் தேசத்திலும் ஆர்ப்பாட்டங்கள் நடக்க வேண்டும்.

இருந்தும் தென்பகுதியில் நடக்கின்ற ஆர்ப்பாட்டங்கள் ஏதோ அண்டை நாட்டில் நடப்பது போலவும் நாங்கள் எங்கள் தமிழர் தாயகத்தில் இருப்பது போன்றதுமான மனப் பிரமை எங்களுக்குள் இருக்கிறது என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆம், காலாகாலமாக தமிழ் இனத்தை வேரறுத்து எங்களை வஞ்சித்த சிங்கள ஆட்சியாளர்களை – அவர்களின் இருப்பிடங்களை வேற்று அரசாகவும் அண்டை நாடாகவும் பார்க்கின்ற மனநிலைக்கு நாம் ஆளாக்கப்பட்டுள்ளோம்.

## அலி சப்ரியின் இராஜினாமா கடிதத்தினை
# ஏற்க மறுத்தார் ஜனாதிபதி

(கொழும்பு)

அலி சப்ரியின் இராஜினாமா கடிதத்தினை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதுவரையில் ஏற்றுக்கொள்ளவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நான்கு பேர் கொண்ட புதிய அமைச்சரவை கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டது.

இதன்போது அலி சப்ரி நிதியமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வினால் நியமிக்கப் பட்டார்.

எனினும் பதவியேற்று 24 மணித்தியாலங்களுக்குள்ளேயே தனது பதவியினை இராஜினாமா செய்வதாக அலி சப்ரி அறிவித்திருந்தார்.

அத்துடன், தேவை ஏற்படின் தனது தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய தயாராகவுள்ளதாகவும் அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

எது எப்படி இருந்தாலும் அலி சப்ரியின் இராஜினாமா கடிதத்தினை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதுவரையில் ஏற்றுக் கொள்ளவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக அவரே இன்றோ அல்லது எதிர்வரும் சில தினங்களிலோ பொறுப்பேற்கக் கூடும் என எதிர்பார்க்கப்படும் அமைச்சரவையிலும் நிதியமைச்சராக செயற்படுவார் எனவும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தையிலும் அவரே பங்கேற்பார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-5)

### எதிர்வரும் நாட்களில் கனமழைக்கு வாய்ப்பு
## விவசாயிகள் முன்னேற்பாடுகளை விரைந்து மேற்கொள்ளுங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு தென் கிழக்கே வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள வளிமண்டல சுழற்சி காரணமாக அடுத்துவரும் மூன்று நாட்களுக்கு வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் பரவலாக மிதமான கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது என யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் நா.பிரதிபராஜா தெரிவித்தார்.

இந்த மழை இடியுடன்கூடிய மழையாக இருக்கும் என்பதனால் இடி மின்னல் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியமாகும்.

மேலும் மேற்காவுகை செயற்பாடு காரணமாக எதிர்வரும் 18 ஆம் திகதிவரை நண்பகலுக்கு பின்னர் அல்லது இரவில் அல்லது அதிகாலையில் மழை கிடைக்க வாய்ப்புள்ளது.

நாட்டில் தற்போது உள்ள நெருக்கடி நிலை காரணமாக எதிர்வரும் காலங்களில் உணவுப் பொருட்களுக்கும் நெருக்கடி ஏற்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ள நிலையில் விவசாய செயற்பாடுகளை உரிய பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடுகளுடன் மேற்கொள்வது அவற்றை பாதுகாக்கும். எனவே விவசாயிகள் இம் முன்னறிவித்தலை கருத்தில் கொண்டு செயற்படுவது அவர்களுக்கு வரக்கூடிய விவசாய பாதிப்புக்களை இயலுமான வரையில் குறைக்கும் என மேலும் தெரிவித்தார். (4-5-33)

## இம்மாத இறுதிவரை நான் பதவியில் இருப்பேன்
### பிரதி சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவின் கோரிக்கையை பரிசீலித்து இந்த மாத இறுதி வரை தான் பிரதி சபாநாயகர் பதவியில் நீடிக்கவுள்ளதாக பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து விலக தீர்மானித்த பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்திருந்தார்.

எனினும், குறித்த கடிதத்தை ஜனாதிபதி ஏற்க மறுத்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 10 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ் பிரதேசத்தில்** அபி கட்டடம், கார்கில்ஸ் பூட்சிற்றி, கொமர்ஷல் வங்கி- வைத்தியசாலை விதி, சுகாதார திணைக்களம், புதிய மூன்று மாடிக்கட்டடம், போதனா மருத்துவமனை யாழ்ப்பாணம், ரில்கோ விடுதி, பல்கலைக்கழக விடுதி வைத்தியசாலை வீதி, யாழ்விடுதி, இலங்கை வங்கி யாழ்ப்பாணம், யாழ் மதர் கெயார்டி, தேசிய சேமிப்பு வங்கி, பிறவுன்ஸ், மருத்துவமனை வீதி, யாழ்ப்பாண நகரம், கந் ப்பசேகரம் வீதி, முனீஷ்வரன் வீதி, (செல்லா தியேட்டர் அருகில்) பிரிட்டிஷ் கவுன்சில் ரக்கா வீதி, பொது முகாமையாளர் அலு வலகம் – மின்சார சபை, ஆளுநர் விடுதி, யாழ் மாவட்ட செயலகம், விஞ்ஞான பீடம், தியாகி அறக் கொடை நிலையம், துளசி மஹால், யு.எஸ். விடுதி, றியோ கிரீம் ஹவுஸ், அரசடி பழம் வீதி சந்தி, மருத்துவமனை வீதி, கச்சேரி நல்லூர் வீதி சந்தி, கைலாச பிள்ளையார் கோவில், முலவை, நல்லூர் கோயில், நாவலர் வீதி இராசாவின் தோட்டம், பருத்தித்துறை வீதி, ரக்கா வீதி, சுண்டிக்குளி, கோயில் வீதி சந்தி, இராமநாதன் வீதி புகையிரத குறுக்கு சந்தி, விளான், சங்கானை, சங்கானை வைத்தியசாலை, சங்கானை சந்தை, நிச்சாமம், தொட்டிலடி, இரும்பு மதவடி, காளிகோவிலடி, சக்கலாவத்தை, வதிரி- உடுப்பிட்டி, பருத்தித் துறை வீதி சந்தி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** Industrial Park-பூந் தோட்டம், ஆசிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## கடவுளே எல்லோருக்கும் குரு

❖ எல்லா அறிவும் நம்முள் இருக்கிறது என்பது உண்மையே. அதை வெளிப்படுத்துவதற்கு மற்றோர் அறிவு வேண்டியிருக்கிறது. அறிவதற்கான திறமை நமக்குள் இருந்தாலும் அதை வெளிக்கொணர வேண்டும். அப்படி ஓர் அறிவை வெளிப்படுத்த மற்றோர் அறிவால் தான் முடியும் என்கிறான் யோகி. உயிரற்ற உணர்ச்சியற்ற ஜடப்பொருள், அறிவை வெளிப்படுத்த முடியாது. அதற்கு மற்றோர் அறிவு வேண்டும் எனபது யோகியின் கருத்து.

❖ நம்முள் இருப்பதை விழிப்புணர்த்த குருமார்கள் நம்முடன் இருக்க வேண்டும். இத்தகைய குருமார்கள் எப்போதும் தேவை. அவர்கள் இல்லாமல் உலகம் ஒருபோதும் இருந்ததில்லை. அவர்கள் இல்லாமல் எந்த ஞானமும் வராது.


❖ [illegible] ஏனெனில் மற்ற குருமார்கள் எவ்வளவு [illegible] இருந்தாலும், தேவதூதர்களாக இருந்தாலும் காலத்தால் கட்டுப்பட்டவர்கள். கடவுள் அவ்வாறில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

**கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 37**




### கிளிநொச்சி மாவட்டம் பற்றிய தகவல்கள்

கிளிநொச்சி மாவட்டம் வடக்கு அகலாங்கு 9° 12' மற்றும் 90°41' இற்கும் கிழக்கு நெட்டாங்கு 79° 57' மற்றும் 80° 36' இற்கும் இடையில் 1279 சதுர கிலோ மீற்றர் பரப்பில் அமைந்துள்ளது. அது 1984 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தின் தென் பகுதியிலிருந்து பிரிக்கப்பட்டு நிறுவப்பட்டது.

எவ்வாறெனினும் அது யாழ்ப்பாண மாவட்டத்தின் தேர்தல் பிரிவாகக் காணப்படுகிறது. மாகாணத்தின் மொத்த நிலப் பரப்பில் 14.4% ஆகும். மொத்த நிலப்பரப்பில் 1205 சதுர கிலோ மீற்றர் தரையாகவும் 74 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீர் பிரதேசமாகவும் காணப்படுகிறது. உள்ளக நீர்ப்பரப்புக்கள் மாவட்டத்தின் மொத்த நிலப் பரப்பில் 5.8% வியாபித்துள்ளது.

வடக்குத் திசையில் யாழ்ப்பாண மாவட்டத்தையும் தெற்குத் திசையில் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்ளையும் கிழக்கு திசைகளில் முல்லைத்தீவு மாவட்டத்தையும் மேற்குத் திசையில் கடலையும் கிளிநொச்சி மாவட்டம் எல்லைகளாகக் கொண்டு காணப்படுகிறது. கிளிநொச்சி மாவட்டத்தின் நிலப் பரப்பில் 29.8% அதாவது 381 சதுர கிலோ மீற்றர் 2010 ஆம் ஆண்டளவில் வனப் பிரதேசமாக காணப்பட்டது. இம் மாவட்டத்தின் உயரம் கடல் மட்டத்திலிருந்து -2 மீற்றர் தொடக்கம் +50 மீற்றர் வரை உயர வேறுபாடுகளைக் கொண்ட நிலவுருவங்களைக் கொண்டுள்ளது.

**கிளிநொச்சி மாவட்டம் 1984 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தின் தென் பகுதியிலிருந்து பிரிக்கப்பட்டு நிறுவப்பட்டது. எவ்வாறெனினும் அது யாழ்ப்பாண மாவட்டத்தின் தேர்தல் பிரிவாகக் காணப்படுகிறது. வட மாகாணத்தின் மொத்த நிலப் பரப்பில் 14.4% ஆகும். மொத்த நிலப்பரப்பில் 1205 சதுர கிலோ மீற்றர் தரையாகவும் 74 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீர் பிரதேசமாகவும் காணப்படுகின்றது.**

**வடக்குத் திசையில் யாழ்ப்பாண மாவட்டத்தையும் தெற்குத் திசையில் மன்னார் மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களையும் கிழக்கு திசைகளில் முல்லைத்தீவு மாவட்டத்தையும் மேற்குத் திசையில் கடலையும் கிளிநொச்சி மாவட்டம் எல்லைகளாகக் கொண்டு காணப்படுகிறது. கிளிநொச்சி மாவட்டத்தின் நிலப்பரப்பில் 29.8% அதாவது 381 சதுர கிலோ மீற்றர் 2010 ஆம் ஆண்டளவில் வனப்பிரதேசமாகக் காணப்பட்டது. 2012 இல் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 94 ஆகவும் காணப்பட்டது.**

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) பிரகாரம், மொத்தச் சனத்தொகை 113,510 ஆகவும் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 94 ஆகவும் காணப்பட்டது. 10 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையின் எழுத்தறிவு 97.7 % ஆகும். இம் மாவட்டத்தின் தலைநகராக கிளிநொச்சி காணப்படுகிறது. இது கொழும்பிலிருந்து 280 கிலோ மீற்றர் நேரடித் தூரத்தில் உள்ளது. 2016 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களினுள் 1608 கி.மீ. நீளத்திற்கு வீதிகள் அமைந்துள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக சேவைத் துறையில் (48%) அதைத்தொடர்ந்து விவசாயத் துறையில் (27%) மற்றும் கைத் தொழிற்றுறையில் (25%) ஆகும்.

அட்டவணை (M3): இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு – கிளிநொச்சி மாவட்டம்

| இனம் | எண்ணிக்கை | % | | சமயம் | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 1,331 | 1.2 | | பௌத்தம் | 1,275 | 1.1 |
| இலங்கைத் தமிழர் | 110,494 | 97.3 | | இந்து | 92,986 | 81.9 |
| இந்தியத் தமிழர் | 1,030 | 0.9 | | இஸ்லாம் | 700 | 0.6 |
| இலங்கை முஸ்லிம் | 629 | 0.6 | | உரோமன் கத்தோலிக்கம் | 12,063 | 10.6 |
| வேறு | 26 | - | | ஏனைய கிருஸ்தவம் | 6,436 | 5.7 |
| | | | | வேறு | 50 | - |
| மொத்தம் | 113,510 | | | மொத்தம் | 113,510 | |

### கிளிநொச்சி மாவட்டம் இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு -2012

இனங்கள் மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு அட்டவணை (M3) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

சனத்தொகையின் பெரும்பான்மையினர் இலங்கை தமிழர்கள் ஆவர். அது மாவட்ட மொத்த சனத்தொகையின் 97.3% ஆகும். சிங்களவர்களது சனத்தொகை 1.2% ஆகும். இந்தியத் தமிழர்களின் சனத்தொகை 0.9% இலங்கை முஸ்லிம்களின் சனத்தொகை 0.6% ஆகும். சமய ரீதியில் நோக்கும் போது இந்துக்கள் 81.9% ஆகும். பௌத்த மக்கள் 1.1% ஆகும். உரோமன் கத்தோலிக்கர்கள் 10.6% ஆகும். ஏனைய கிறிஸ்தவர்கள் 5.7% ஆகவும் இஸ்லாமியர்கள் 0.6% ஆகவும் காணப்படுகின்றனர்.

### கிளிநொச்சி மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின்படி வடமாகாண சபையில் உள்ள கிளிநொச்சி மாவட்டத்திற்கு தேர்தல் ஆணையாளரால் நிர்ணயிக்கப்பட்ட மாகாணசபை உறுப்பினர்கள் 4 ஆக இருந்தது. திருத்தச்சட்டம் 2017 பகுதி 3A (2) இன்படி யாழ்ப்பாண மாவட்டம் 2 மாகாணசபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின்படி வடமாகாண சபையில் உள்ள கிளிநொச்சி மாவட்டத்திற்கு தேர்தல் ஆணையாளரால் நிர்ணயிக்கப்பட்ட மாகாணசபை உறுப்பினர்கள் 4 ஆக இருந்தது. இதன்படி யாழ்ப்பாண மாவட்டம் 2 மாகாணசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யக்கூடிய வகையில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

கிளிநொச்சி மாவட்டத்தில் 4 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 95 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 113,510 பேரிலிருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 56,755 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் 28.11. 2017 மாலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 19 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும்படி கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 4 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 23 பிரேரணைகளை குழு பெற்றுக் கொண்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம்...

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் உள்ள தோட்டக் காணி ஒன்றில் வெங்காயத்திற்கு ஒருவர் நீர் இறைத்துக் கொண்டிருந்த போது, மற்றொருவர் மின்சார வயரின் உதவியுடன் வெளிச்சம் பாய்ச்சிக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது, மின்சார வயரில் இருந்து மின் தாக்கியதில் குறித்த இளைஞன் பாதிக்கப்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டடார்.

எனினும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

22 வயதுடைய செல்வராசா கேதீஸ்வரன் என்ற இளைஞனே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

## 10 நாட்கள்...

பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத் தொடரை ஏப்ரல் 19ஆம் திகதி முதல் நடாத்த பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மானித்துள்ளது.

இதன்படி ஏப்ரல் 19ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூடவுள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று பிற்பகல் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க அறிவித்துள்ளார். (ம-7)

## இடி விழுந்ததில்...

பகுதி அளவில் சேதம் அடைந்துள்ளது.

நேற்று யாழில் மழையுடனும் இடியுடனும் கூடிய காலநிலை நிலவியது.

அந்தவகையில் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கிற்கு அருகே உள்ள வீட்டின் மீது இடி விழுந்ததால் வீடானது பகுதியளவில் சேதமாகியுள்ளது.

எனினும் இந்த அனர்த்தத்தினால் தெய்வாதீனமாக எவருக்கும் காயங்கள் எவையும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,104)













## பொலிஸாருக்கு...

எதிராகவும் நேற்று ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

பாராளுமன்ற வீதித்தடையில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், குறித்த பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கு இளம் பெண் ஒருவர் சிவப்பு ரோஜா ஒன்றை பரிசளித்துள்ளார். (ம-7)

## நெருக்கடியிலி...

நாடுகளுடன் இணைந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

"ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளான (ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, ருமேனியா) மற்றும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, நோர்வே, சுவிட்சர்லாந்து மற்றும் ஐக்கிய இராச்சியம் மையங்களுடன் இணைந்து பின்வரும் அறிக்கையை வெளியிடுகிறது.

ஒன்றுகூடும் சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் அமைதியாக நடைபெறும் சந்தர்ப்பத்தில், அவை எந்த ஒரு ஜனநாயக சமூகத்தினதும் தூண்களாகும். எனவே அனைத்து தரப்பினரும் நிதானத்துடன் தொடர்ந்து செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறோம். அத்துடன், அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதை ஒரு நேர்மறையான முன்னெடுப்பாக நாம் கருதுகிறோம்.

இலங்கை மக்களைப் பாதித்துள்ள தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஆக்கபூர்வமான மற்றும் ஜனநாயக வழிமுறைகளை ஆராயுமாறு அனைத்துத் தரப்பினருக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் நிலையான பாதைக்கு கொண்டு வருவதற்கு தேவையான சீர்திருத்தங்கள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள் தீர்க்கமான கலந்துரையாடல்களை ஆரம்பிக்க வேண்டிய நிலைமையின் தீவிரத் தன்மையை நாம் வலியுறுத்துகிறோம். (ம-7)

## நாணய...

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் மேற்படி சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் அரச தலைவர் மற்றும் முன்னாள் பிரதமர் மாத்திரமே கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி சந்திப்பின்போது, சர்வதேச நாணய நிதியத்திற்கான விஜயம் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனை தொடர்பில் அரச தலைவர் விரிவாக கேட்டறிந்தார்.

மேலும் ஜப்பான், தென்கொரியா, இந்தியா, சீனா உள்ளிட்ட பிராந்தியத்தில் ஐந்து முக்கிய நாடுகளால் அமைக்கப்படவுள்ள உத்தேச குழுக்கள் குறித்தும் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோட்டாபய ராஜபக்ச நீண்ட நேரம் கேட்டறிந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் சில நிமிட கலந்துரையாடலின் பின்னர் அரச தலைவர் பாராளுமன்ற வளாகத்தில் இருந்து வெளியேறினார். (ம-7)

## புத்தாண்டில்...

பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரட்நாயக்க அறிவித்துள்ளார்.

தமிழ் மற்றும் சிங்கள புதுவருடத்தை முன்னிட்டே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது

இதேவேளை ஏப்ரல் 11 ஆம் 12 ஆம் திகதிகளில் 4 மணித்தியாலங்கள் மின்சார விநியோகத் தடை மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் ஏப்ரல் 16ஆம் திகதியும் 17ஆம் திகதியும் 2 மணித்தியாலம் 15 நிமிடங்கள் மின்சார விநியோகத் தடை மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-7)

## ராஜபக்ச...

டார்.

"ஜனாதிபதி பதவி விலகுவது மட்டுமன்றி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையும் இல்லாதொழிக்கப்பட வேண்டும்" என அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) ஆதரவளிக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அது தற்போது பாரிய அரசியல் நெருக்கடியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவும் உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் தெரிவித்தே பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வர நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## நாட்...

போதே இதனை அவர் தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

எதிர்க்கட்சி எப்போதும் அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களை மாத்திரம் கூறிக்கொண்டிருக்கமுடியாது என்றும் எந்த சந்தர்ப்பத்தின் போதும் நாட்டை பொறுப்பேற்க தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (ம-7)

## தீவிர...

அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அந்த போராட்டங்களுக்கு அதிகபட்ச ஆதரவை வழங்குவதுடன், தேசிய மக்கள் சக்தியினால் தொடர் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக திஸாநாயக்க தெரிவித்தார்.

இத்தருணத்தில் ஜனாதிபதியும் அரசாங்கமும் இராஜினாமா செய்வது தவிர்க்க முடியாதது எனவும் அவ்வாறாயின் தேசிய மக்கள் சக்தி இடைக்கால அரசாங்கத்திற்கான பிரேரணைகளை சமர்ப்பிக்கும் எனவும் திஸாநாயக்க தெரிவித்தார். (ம-7)

# பாராளுமன்றம் வரமாட்டேன்

## ஆளும் தரப்பு எம்.பி.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கும் வரை தான் பாராளுமன்றத்திற்கு சமுகமளிக்க போவதில்லை என ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நாடு ஸ்திர நிலைமையை அடைந்ததன் பின்னர் தான் சபைக்கு வருகை தந்து அமர்வதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

## பாராளுமன்ற...

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரியும் அரசாங்கத்திற்கு எதிராகவும் களனி பல்கலைக்கழக மாணவர்கள் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

பேரணியாக சென்ற மாணவர்கள் பாராளுமன்றத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, பொலிஸார் வீதித்தடைகளை ஏற்படுத்தி பாதுகாப்பை பலப்படுத்தினர். (ம-7)




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS (C-4120)

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -15'000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

## ஆசிரியர்கள் தேவை

தெல்லிப்பளையில் இயங்கும் புதிய கல்வி நிலையம் ஒன்றுக்கு தரம் 1 - 5 வரை 5 பாடங்களுக்கும் தரம் 6 - 11 வரை விஞ்ஞானம், ICT, வணிகக் கல்வி, புவியியல் பாடங்களுக்கும் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். (10889)

077 834 3666


## யாழ்.மணியந்தோட்டத்தில்

# கொலை செய்து புதைக்கப்பட்ட பெண்ணின் சடலமும் மோ.சைக்கிளும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மணியந்தோட்டத்தில் கொலை செய்து புதைக்கப்பட்ட பெண்ணின் சடலமும் மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா மற்றும் சட்ட மருத்துவ வல்லுநர் எஸ். பிரணவன் ஆகியோரின் முன்னிலையில் இந்தப் பணி முன்னெடுக்கப் பட்டது.

அயல் கிராமத்தைச் சேர்ந்த 48 வயதுடைய பெண் ஒருவர் கடந்த முதலாம் திகதி தொடக்கம் காணாமற்போயிருந்த நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தப் பெண்ணை அடித்துக் கொலை செய்து புதைத்தனர் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் கணவன், மனைவி மற்றும் அவர்களது மகன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

காசுக் கொடுக்கல் வாங்கல் காரணமாக எழுந்த முரண்பாட்டினால் சந்தேகநபர்கள் பெண்ணை அடித்துக் கொலை செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)


## மணமகள் தேவை

மணமகன் விபரம் :
குடும்பம் - யாழ். இந்து கௌரவ குடும்பம், பிறந்த ஆண்டு - 1987, நட்சத்திரம் - சதயம் (3 ஆம் பாதம்), தொழில் - ஆசிரியர், எதிர்பார்ப்பு - அரசபணி (ஆசிரியர் விரும்பத்தக்கது)
நேரடியாகவோ, தரகர் மூலமாக தொடர்பு கொள்ளலாம். (10885)

076 270 3977

## வாடகைக்கு

யாழ். கச்சேரிக்கு அண்மையாக A9 வீதியில் கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு.
(26 X 57 அடி)
புதிதாக திருத்தம் செய்யப்பட்டது.
Food Cityக்கு உகந்த இடம் (C-4140)

077 279 8192

## வேலையாட்கள் தேவை

யாழ். - கொழும்பு அதிசொகுசு பஸ்ஸுக்கு நடத்துனர்கள் தேவை.
ஆர்வம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.இல: 076 009 4946 (10971)

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கும் பஸ் சேவை மற்றும் பொதிகள் சேவை நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
ஆண் /பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

தொ.இல: 077 386 6250 (10971)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- சுண்டிக் குளப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில்.
- A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன.
- 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் 5 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் கட்டுக்கிணற்றுடன் பயன்தரும் 80 தென்னைகள் உள்ளன.

தரகர் தேவையில்லை (10967)

பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை ரூ.450,000

ஜெயம் - 077 814 7389
077 241 7589

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மறவன்புலத்தில் 30 பரப்புக் காணி விற்பனைக்கு (நிலப்பரப்பு)

- மறவன்புலம் மாவடி சந்திக்கு அருகாமை.
- இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் - பூநகரி பிரதான வீதியில் (A32) இலிருந்து 200m தூரத்தில்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 2½ Km தூரம் (A9)
- சகலகலாவல்லி வித்தியாலயம் அருகாமை
- நல்ல தண்ணீர் கிராமம் (மணல் மண்)
- அதிக குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி (நல்ல சூழல்)
- 16 அடி பாதையுடன்

ஒரு பரப்பின் விலை -
3 இலட்சம் மட்டும் (300,000) (10946)

074 291 3725, 074 291 3726, 074 291 3727

## உடனடிவேலை-உணவு உற்பத்தியாளர்

R6

வல்வெட்டித்துறையில் இயங்கும் உள்ளூர் உணவுகளை தயாரிக்கும் நிறுவனத்தில் வேலைக்கு ஆட்கள் தேவை



சம்பளம் -:30'000/=

(இருபாலாரும்) (முன் அனுபவம் தேவையில்லை (C-4145)

தொடர்புகளுக்கு · 0777-068-777

## வேலையாட்கள் தேவையா?

Interview இற்கு 100 இற்கு மேற்பட்டவர்கள்... 12.04.2022
9.00am-12.30pm. @yarlpardy Hotel
உங்கள் நிறுவனமும் பங்குபற்றலாம்.
Call before 10.04.2022 3.00pm

DEWMAS
074 138 3368
077 773 3368 (10969)

## பணிப்பெண் தேவை

மானிப்பாய் நவாலியில் வீட்டு வேலைகள் செய்வதற்கு 35 - 45 வயதிற்கு இடைப்பட்ட நேர்மையான வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு :

077 788 8325 (10964)

## காணி விற்பனைக்கு

ஓட்டுமடச் சந்தியில் இருந்து 1ஆம் ஒழுங்கையில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

1 பரப்பின் விலை
8 இலட்சம்

பார்வையிடும் நேரம்
காலை 8.00 - மாலை 6.00 மணிவரை (10970)

தொடர்பு:-
077 862 6251, 074 008 9086


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு 1947 . 12 . 27



இறப்பு 2022 . 03 . 02

திதி - வளர்பிறை அமாவாசை

கடந்த 02.03.2022 அன்று இறைபதமடைந்த

அமரர்

### காசிப்பிள்ளை பரமானந்தம்

(உரிமையாளர் - காசிப்பிள்ளை அன் சன்ஸ், லக்சுமி டிஜிற்றல் கலர் லாப் - சங்கானை)

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வானது திடீரென அமுலான ஊரடங்கைத் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் இந்நிகழ்வானது நாளை ஞாயிற்றுக்கிழமை (10.04.2022) அன்று அன்னாரது இல்லத்தில் நண்பகல் 11.00 மணியளவில் இடம்பெறும். இவ்அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்று இடம்பெறும் அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் மரணச் செய்தியறிந்து தொலைபேசி வாயிலாகவும் மற்றும் முகநூல், வலைத்தளங்கள் வாயிலாகவும் அனுதாபச் செய்திகளை அனுப்பிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். (C-4144)

077 290 8787
சங்கானை. 076 655 1274
குடும்பத்தினர்


## வேலைக்கு ஆட்கள் தேவை

நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தும் கம்பனிக்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
(ஆண், பெண் இருபாலாரும்) (10995)

077 628 3910
077 401 1204

## வாடகைக்கு

யாழ். நகருக்கு அருகில் பிரதான வீதியில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் நல்ல அமைதியான சூழலில் வீடு வாடகைக்கு உண்டு. (10952)

தொடர்பு இல.
077 162 2760


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.